# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2193/55 - 2020 සැප්තැම්බර් මස 18 වැනි සිකුරාදා - 2020.09.18

*2193/55 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டம்**

*1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 41 ஆம் பிரிவின் கீழ் விளையாட்டு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**நாமல் ராஜபக்ஷ** (பா. உ.),
இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர்.

கொழும்பு,
*2020, செத்தெம்பர் 16.*

ஒழுங்குவிதிகள்

01. 2017.02.25 ஆந் திகதி வெளியிடப்பட்ட விளையாட்டுக் கட்டளைகளின் வாயிலாக தேசிய விளையாட்டுச் சங்கங்களின் தெரிவுக் குழுக்களை நியமிக்கும் முறைமையினை நீக்கி மற்றும் 2016.10.27 ஆந் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 1990/23 கொண்ட வர்த்தமானியின் ஒழுங்குவிதிகளில் III ஆம் பகுதியில் இலக்கம் 7 (XIV) விடயத்தினை நீக்கி திருத்தியமைக்கப்பட்ட 2017.02.13 ஆந் திகதிய இலக்கம் 2006/13 ஐக் கொண்ட அதிவிசேட வர்த்தமானியின் இலக்கம் 7 (XIV) (அ), (ஆ) மற்றும் (இ) பிரிவுகளை நீக்கி திருத்தியமைக்கப்பட்ட இலக்கம் 2166/ 9 மற்றும் 2020.03.10 ஆந் திகதிய அறிவித்தலின் 7 (XIV) (ஆ) ஆம் பிரிவினை நீக்கி பின்வரும் பிரிவினை பிரதியீடு செய்வதனால்,

(ஆ) தேசிய விளையாட்டுச் சங்கங்களில்/ சம்மேளனங்களில் தெரிவுக் குழுக்களை நியமிப்பதற்காக ஏற்புடைய தேசிய விளையாட்டுச் சங்கம்/ சம்மேளனம் தனது விளையாட்டுச் சங்கங்களுடன்/ சம்மேளனங்களுடன் இணைந்த சகல உறுப்பினர் நிறுவனங்களுக்கும் உகந்த விதமாக அறிவித்து வேட்புமனுக்களைப் பெற்று நிறைவேற்றுக் குழுக்

1A - G 32930 — 20 (2020/09)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*கூட்டமொன்றின் வாயிலாக மிகப் பொருத்தமான அங்கத்தவர்கள் பத்து பேரினை (10) தெரிவு செய்துகொள்ள வேண்டியதுடன் தெரிவுசெய்து கொள்ளப்பட்ட வேட்புமனு ஆவணத்துடன் கூடிய விண்ணப்பப்படிவத்தினை விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கும் பிரதியொன்றினை தேசிய தெரிவுக் குழுவிற்கும் அனுப்பி வைத்தல் வேண்டும். தேசிய தெரிவுக் குழுவினால் அவ் வேட்புமனுக்கள் தொடர்பாக தனது பரிந்துரை செய்யப்பட்ட பெயர்ப்பட்டியலை தேசிய விளையாட்டுச் சபைக்கு அனுப்புதல் வேண்டும். தேசிய விளையாட்டுச் சபையால் அப்பரிந்துரைகள் மேலும் கவனத்திற்கு கொள்ளப்பட்டு அச் சபையின் இணக்கப்பாட்டினை, அனுமதியின் பொருட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.*

*10-181*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*